# இந்திய இலங்கை ஒப்பந்தம்: ஈழப் புரட்சி அமைப்பின் முன்மொழிவுகள்.

www.padippakam.com

ஈழப்புரட்சிஅமைப்பு
EELAM REVOLUTIONARY ORGANISATION
EROS

படிப்பகம்

www.padippakam.com

□ இந்திய இலங்கை ஒப்பந்தம் □

ஈழப் புரட்சி அமைப்பின் முன்மொழிவுகள்

□

1988 மார்ச்

“

தமிழ் பேசும் மக்களைப் பீடித்திருக்கும் அபாயங்கள் முற்றிலும் வேறானவை. மலையக மக்களுக்கெதிராக 1948ல் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டமும்; அவர்களை நாடு கடத்த நிர்ப்பந்தித்த சிறிமா-சாஸ்த்திரி ஒப்பந்தமும்; கிழக்கு மாகாண தமிழ்-முஸ்லீம் விவசாயிகளின் நிலங்களைப் பறித்த குடியேற்றத் திட்டங்களும்; நடுத்தர வகுப்பாரை நிலைகுலையச் செய்த மொழிச்சட்டமும்; இனவாரித் தரப்படுத்தலும் இனம் முழுவதற்குமான படுகொலைகளுக்கு வித்திட்ட பயங்கரவாதத்தடைச் சட்டமுமே; இன்னும் தமிழ்பேசும் மக்களைப் பீடித்துள்ள அபாயங்களாகும். இவற்றை இலங்கை-இந்திய ஒப்பந்தமானது எந்தவகையிலும் தீர்த்து வைக்கவில்லையென்பது வெளிப்படையானது.

”

தொடர்பு முகவரி:

ஈழம்; த.பெ. இல: 2356, சென்னை - 24, இந்தியா.

படிப்பகம்

www.padippakam.com



## ஒப்பந்தமும் இலங்கை அரசும்

யூலை 29ல் ஒப்பந்தம் வந்தபோது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிலவிய மகிழ்ச்சியும் பரபரப்பும் தற்போது அற்றுப்போய்விட்டது. மீண்டும் யுத்தமும் கைதுகளும் படுகொலைகளும் சூழ்ந்து கொண்டிருக்கின்றன.

இந்திய இராணுவம் மீதோ, இலங்கை இராணுவம் மீதோ வெறுமனே வசைமொழிகளைக்கூறி உண்மையைத் திசை திருப்பாமல் இதன் சூத்திரதாரிகள் யார் என்பதை இனங்காட்ட வேண்டிய காலம் வந்து விட்டது.

அமைதி நிலவிய காலங்களில் இலங்கை அரசின் போக்கை நோக்கும்போது அது தனது இராணுவத்தினூடாகவும் ஊர்காவல் படையூடாகவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இயக்கங்களைத் சீண்டுவதிலும் கலவரங்களைத் தூண்டுவதிலும் ஆர்வம் காட்டி வந்திருப்பதை இனங்காண முடியும்.

ஒப்பந்தம் ஏற்பட்டு சில நாட்களில் பூனகரி இராணுவத்தினரால் எமது தோழர்கள் தேவா, குகன் கொல்லப்பட்டதும், தோப்பூர் இராணுவத்தினரால் தோழர் வரதன் கொலை செய்யப்பட்டதும், விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த 17 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின் இந்திய தரப்பையும் மீறி கொழும்புக்குக் கொண்டு செல்ல முயன்றபோது அவர்கள் இறந்து போனதும் இலங்கை அரசு விடுதலை அமைப்புக்களை ஒப்பந்தத்திற்கு புறம்பாகத் சீண்டியிருப்பதற்கு ஆதாரமாக இருக்கின்றன.

படிப்பகம்

இவை மட்டுமல்லாமல் இடைக்கால நிர்வாகம் அறிவிக்கப் பட்டதற்கு மறுநாள் இரு தமிழர்களை திருகோணமலையில் வைத்து ஊர்க்காவல் படையினர் கொலை செய்த போது உருவான கலவரத்தில் இலங்கைக் கடற்படையினர் ஆயுதங்கள் சகிதம் வெளியே வந்து பொது மக்களைத்தாக்க முற்பட்டது முதலான சம்பவங்கள் இலங்கை அரசு இனக்கலவரத்தில் பின்புறமாக இருந்ததற்கு சான்றுகளாக இருக்கின்றன.

மேலும் ஒப்பந்தத்திலுள்ளபடி விடுதலை அமைப்புகளின்உறுப்பினர் களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதோடு நிபந்தனையற்ற விடுதலையும் கிடைக்க வேண்டுமென்ற கட்டாயத்திற்கு முரணாக வடக்கு-கிழக்கில் கைதானவர்கள் மட்டுமே விடுவிக்கப்படுவர் எனவும் கூறத் தொடங்கியது. மலையகம், கொழும்பு முதலான சம்பவங்களில் ஈடு பட்டவர்கள் விடுவிக்கப்பட மாட்டார்களெனவும் புதிய பிரச்சார மொன்றை கட்டவிழ்த்து விட்டது. இதன் மூலம் ஒப்பந்தத்தின் மீது இலங்கை அரசு தன்னிச்சைப் போக்கை கடைபிடிக்கத் தொடங்கி யிருந்தது. இருந்தும் வடக்கு-கிழக்கு சம்பவங்களில் மட்டும் தொடர்பு பட்டவர்களைத் தானும் இன்னமும் முழுமையாக இவர்கள் விடுவிக்கவில்லையென்பதும் கவனிக்கத்தக்கது.

ஒப்பந்தத்தின் கீழ் கலைக்கப்பட வேண்டிய ஊர்க்காவல் படை யினரை கலைக்க மறுப்பதுடன் அவர்களை மீண்டும் ஆயுதபாணிகளாக தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்றப் பணித்திருப்பதும் ஒப்பந்தத்தை மீறும் செயலே. இவர்களுக்கு பயிற்சி நெறிகளும், போதிய பணமும் வழங்கப்பட்டு ஊக்குவிப்பும் கொடுக்கப்படுகிறது. மேற்கூறிய நிகழ்வு

www.padippakam.com



களில் திருகோணமலைக் கலவரங்களின் போது அகதிகளான சிங்களவர்களினதும், இதனால் கொதிப்படைந்த அமைச்சரவையினதும் வற்புறுத்தலைப் பயன்படுத்தி 04-10-87 அன்று லெப். ஜெனரல் திபீந்தர் சிங்கை வைத்து கூட்டப்பட்ட பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் இந்திய இராணுவத்தினரின் அமைதி காப்பில் தாம் நம்பிக்கையற்றுப் போய் விட்டதாக ஜெயவர்த்தன கூறியவற்றை இங்கு நினைவுபடுத்த வேண்டும்.

இந்திய இராணுவம் தனக்கு நம்பிக்கையாகச் செயல்படுகிறதாயின், இயக்கங்கள் வசமுள்ள மீதமான ஆயுதங்களை முற்றாகக் களைவதை முதலில் செய்யவேண்டுமென, ஜெயவர்த்தன வலியுறுத்தியபோது அதற்கு இசைந்துபோன இந்தியஅரசு இராணுவ நடவடிக்கைகளுக்குத் தயாரானது. இம்முடிவுகள்எடுக்கப்பட்ட பின்னர் கைது செய்யப் பட்ட குமரப்பா முதலான விடுதலைப் புலிகள் 17 பேரை கொழும்பிற்கு கொண்டு செல்ல முயன்றபோது ஏற்பட்ட குழப்பங்களினால் வடக்கு கிழக்கில் அமைதி குலைந்தது. மீண்டும் போரையும் அனர்த்தங்களையும் தமிழ் பேசும் மக்கள் சந்திக்கத் தொடங்கினர்.

ஒப்பந்தத்தை தானே மீறி வந்த ஜெயவர்த்தன யூலை 29ல் ஒப்பந்தம் நிறைவேறிய போது கூடவே வந்த இந்திய இராணுவத்தின் பணிபற்றி அப்போது எடுத்துச் சொன்ன வார்த்தைகளை இங்கு மீட்பது சாலப் பொருத்தமானது. ''இந்திய இராணுவமானது இயக்கங்களின் வசமுள்ள ஆயுதங்களை களைவதற்காக இலங்கை இராணுவத்திற்கு வலுச்சேர்க்கும் இராணுவமாகவே வரவழைக்கப் பட்டிருக்கிறது; அமைதியான முறையில் ஆயுதங்கள் கொடுக்கப் படாவிட்டால்

படிப்பகம்

www.padippakam.com



பலவந்தமாக அவை பறிக்கப்படும் எனக் கூறிய ஜெயவர்த்தன, ஆயுதப் பறிப்பு நிறைவு பெற்றதும் இந்தியப் படைகள் வெளியேறி விடும்" எனவும் கூறியிருந்தார்.

இதன் மூலம் ஒப்பந்தத்தை மீறும் சக்தியாக இலங்கை அரசு விளங்கி வருவதும், இலங்கை-இந்திய ஒப்பந்தமானது தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பற்ற நிலையொன்றைத் தோற்றுவித்திருப்பது மான, இச்சூழ்நிலையிலேயே ஒப்பந்தம் குறித்தான கேள்விக்குறி எழுந்து நிற்கிறது.

## ஒப்பந்தமும் ஈழப் புரட்சி அமைப்பும்

ஒப்பந்தம் ஏற்பட்டபோது, அதன் உள்ளார்ந்தத்தைப் புரிந்து கொண்ட ஈழப் புரட்சி அமைப்பானது ஒப்பந்தத்தை அமுலாக்குவதில் இடையூறு செய்யும் சக்தியாக இருக்க மாட்டாது என்பதற்கு அடையாளமாகவும், எமது செயற்பாடுகளுக்கு எவரும் வன்முறை மூலம் தடைவிதிக்காதிருக்கும் வகையில் இந்திய அரசு பாதுகாப்பு வழங்கும் என்ற நம்பிக்கையிலும் திருப்திகரமான முறையில் ஆயுத ஒப்படைப் பினைச் செய்திருந்தது. ஆயுதக்களைவு நடவடிக்கைகளை இந்திய இராணுவம் பலவந்தமாக மேற்கொண்ட காலங்களில் வன்முறைகள் எதிலும் ஈடுபடாதிருந்து எமது உறுதிமொழியை நாம் காப்பாற்றி யிருக்கிறோம். இந்நிலையிலேயே ஈழப் புரட்சி அமைப்பின் நால்வரை இலங்கை இராணுவம் கிழக்கு மாகாணத்தில் வைத்து கைது செய்த தோடு கொழும்பிற்கும் கொண்டு சென்றுள்ளது. இவர்களில் ஒருவர் மீது 1984ம் ஆண்டில் நிகழ்ந்த சம்பவத்திற்கு குற்றச்சாட்டும் சுமத்தப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டுள்ளது. இவர்கள் தொடர்பான விடுவிப்பில் ஈடுபட இந்திய தரப்பினரைப் பார்த்து, இலங்கை- இந்திய ஒப்பந்தம் வடக்கு கிழக்கிற்கு மட்டுமே செல்லுபடியாகும் எனப் பதிலளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தமானது வடக்கு-கிழக்கிற்கு மட்டுமே செல்லுபடியாகுமெனக் கூறிக்கொண்டே கிழக்கு மாகாணத்தில் வைத்து கைதுசெய்திருப்பதும் ஒப்பந்தத்தின்படி மன்னிப்பு வழங்கப்பட்டவர்கள் மீது குற்றம் சுமத்தி இருப்பதும் இலங்கை அரசின் அப்பட்டமான ஒப்பந்த மீறலே.

இவற்றை ஆதாரமாகக் கொண்டே இலங்கை-இந்திய ஒப்பந்தமானது இனப் பிரச்சனை மீதான நடைமுறையில் சாத்தியமற்ற தொன்ருகிப் போய்விட்டது என தமிழ் பேசும் மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். இலங்கை அரசின் அத்துமீறல்கள் இந்திய அரசின் சக்தியையும் மீறி தன்னிச்சையாகச் சென்றுகொண்டிருப்பதனல்இந்திய அரசின் மீது கொண்டிருந்த நம்பிக்கையும் இழந்து போகிறது.

## *நெருக்கடி நிலை சீராக வேண்டுமாயின்...*

☐ **அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையன்றி விடுதலை செய்யப்படவேண்டும்.**

☐ **தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கான தீர்வை இலங்கை இந்திய அரசுகள் தாமே தீர்மானிக்கும் நடைமுறையை மாற்றி இலங்கை இந்திய அரசுப் பிரதிநிதிகளுடன் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய உயர்மட்டக் குழுவொன்றினூடாகவே அணுகுதல் வேண்டும்.**

படிப்பகம்

□ **ஆயுதக்களைவு என்ற போர்வையின்கீழ் ஒருதலைப்பட்சமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள யுத்தமும் தேடுதல்களும் நிறுத்தப்படல் வேண்டும்.**

## *இந்திய அரசின் அணுகுமுறை*

ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முற்பட்ட காலங்களிலிருந்தே இலங்கை அரசு மாகாண சபையை ஏற்றுக் கொள்ளுமாறும், ஆயுதங்களை கையளிக்குமாறும் சரணடையும் படியும் வேண்டுகோள் விடுத்த வண்ணமிருந்தது. இதற்காக அவர்கள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் உச்சக்கட்டமே வடமராட்சி படுகொலைகளாகும்.

அப்போது இவற்றை ஆட்சேபித்த இந்திய அரசு தமிழ் மக்களை காப்பதாகக் கூறிக்கொண்டு பலாத்காரமாக உணவுப் பொட்டலங்களைப் போட்டு ஜெயவர்த்தனவை மிரட்டியிருந்தது. இம் மிரட்டலே ஜெயவர்த்தனவை ஒப்பந்தமொன்றிற்காக பணியச்செய்திருந்தது. யூலை 29ல் கையொப்பமான இவ்வொப்பந்தம் இந்தியாவின் பாதுகாப்பைப் பற்றியும் இலங்கைத் தமிழரின் எதிர்காலம் பற்றியும் எடுத்துச் சொல்கின்றது. இவற்றில் திருகோணமலைத் துறைமுகமும் அங்குள்ள எண்ணெய் குதமும், புத்தளத்து அமெரிக்க ஒலிபரப்பு நிலையமும், வெளிநாட்டு உளவு ஸ்தாபனங்களும் இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக அமையாவண்ணம் கட்டுப்படுத்துகிறது. அத்துடன் இலங்கை கோருமிடத்து இராணுவ உதவியும் தமிழ்நாட்டில் இயங்கி வரும் போராளிகளை நாடு கடத்தி ஒப்படைக்கவும் இதில் வகை செய்யப்பட்டுள்ளது. முற்றிலும் இந்தியாவின் பாதுகாப்பையே

கவனத்தில் கொண்ட ஒப்பந்தத்தின் இப்பகுதி நடைமுறையில் நிறைவேறிவருகிறது. இன்றைய நிலையில் இந்துமா சமுத்திரத்தின் அமைதி என்பது இந்தியாவின் பாதுகாப்போடு பின்னிப் பிணைந்தது என்ற வகையில் ஒப்பந்தத்தின் இப்பகுதியை ஏற்றுக்கொள்வதோடு, இதை நடைமுறையில் பயன்படுத்துவதில் ஈழப் புரட்சி அமைப்பானது இடையூருக இருக்க மாட்டாது என்ற தீர்மானத்தையும் வெளியிட்டிருந்தது.

ஒப்பந்தத்தின் மறுபகுதியான தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் பற்றிய விடயங்கள் மாகாண சபைத்தீர்வையும், மொழிக்கான சம அந்தஸ்தையும் வடக்குக் கிழக்கு இணைப்பையும் பிரதானமாகக் கொண்டிருக்கிறது. இவற்றுடன் நாடற்ற மலையகமக்களை இந்தியப் பிரசைகளாக்கல், கைதிகளை விடுதலை செய்தல், போராளிகளின் ஆயுதங்களைக் களைதல், ஊர்காவல் படையைக் கலைத்தல், இலங்கை இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடங்கியிருத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக அமைகிறது. இவற்றை நிறைவேற்றும் பொறுப்பு ஜெயவர்த்தனுவிடமேயே முழுமையாக ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இனப்பிரச்சனைக்கான தீர்வாக ஒப்பந்தத்தின் இப்பகுதிகளையே இலங்கை இந்திய அரசுகள் முன் மொழிந்திருக்கின்றன. இதன் உள்ளார்ந்த அம்சங்களை நோக்கும் போது தமிழர் பிரச்சனையென்பது வெறுமனே அதிகாரப்பரவலாக்கம் பற்றிய பிரச்சனையாக, மொழிக் கான அந்தஸ்து கோரும் பிரச்சனையாக அணுகப்பட்டிருப்பதும் புலனுகிறது.

## மக்கள் எதிர்நோக்கும் அபாயங்கள்

ஆனல் தமிழ் பேசும் மக்களைப் பிடித்திருக்கும் அபாயங்கள் முற்றிலும் வேருனவை. மலையக மக்களுக்கெதிராக 1948-ல் இயற்றப் பட்ட குடியுரிமைச் சட்டமும், அவர்களை நாடு கடத்த நிர்ப்பந்தித்த சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தமும், கிழக்கு மாகாண தமிழ் — முஸ்லீம் விவசாயிகளின் நிலங்களைப் பறித்த குடியேற்றத் திட்டங்களும், நடுத்தர வகுப்பாரை நிலைகுலையச் செய்த மொழிச்சட்டமும், இன வாரித் தரப்படுத்தலும், இனம் முழுவதுக்குமான படுகொலைகளுக்கு வித்திட்ட பயங்கரவாதத் தடைச் சட்டமுமே, இன்னும் தமிழ்பேசும் மக்களைப் பீடித்துள்ள அபாயங்களாகும். இவற்றை இலங்கை-இந்திய ஒப்பந்தமானது எந்தவகையிலும் தீர்த்து வைக்கவில்லை என்பது வெளிப்படையானது.

இதனுலேயே இலங்கை இந்திய ஒப்பந்தமானது இந்தியாவின் பாதுகாப்பு கருதி மிக அவசரமாக செய்யப்பட்ட ஒப்பந்தமேயன்றி இனப்பிரச்சனையின் தீர்வுக்கான ஒப்பந்தமல்ல என்று கூறுகிருேம். பிரச்சனைக்கு இது தீர்வைக் கொடுக்காதது மட்டுமல்ல, தமது பிரச் சனைகளை தாமே தீர்க்கும் உரிமையைக்கூட தமிழ் மக்களுக்கு கொடுக்க மறுத்திருக்கிறது. ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைத் தமிழர் களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கிற சக்தியாக இந்திய அரசு தன்னைத்தானே நியமித்திருக்கிறது. இவர்கள் இலங்கை அரசோடு கூட்டுச் சேர்ந்து இனப் பிரச்சனைக்கு இறுதித்தீர்வு காணப் போவதாக வும் அறிவித்துள்ளனர்,

www.padippakam.com



இவ்விரு அரசுகளும் இணைந்து எவ்வளவு தூரம் தமிழ் பேசும் மக்களின் எண்ண அபிலாசைகளைப் புரிந்து தீர்வை முன்வைக்கப் போகிறுர்கள் என்பது கேள்வியாக இருக்கின்றது. இந்திய அரசின் பார்வையில் இலங்கை தமிழர் பிரச்சனை என்பது அவர்களது பாது காப்பு பற்றியதென்றே விளங்கிக் கொண்டிருக்கிறது. இதைத் தீர்க்க தனது இராணுவத்தை நீண்ட காலத்திற்கு நிலை கொள்ளச் செய்ய வேண்டியிருப்பதாக எண்ணிக் சொண்டிருக்கிறது. இலங்கை அரசோ இனப்பிரச்சனை என்பதெல்லாம் மொழிபற்றிய சர்ச்சையென பாசாங்கு செய்கிறது. தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து கொடுத்துவிட்டால் எல்லாம் தீர்ந்துவிடுமென்ற தட்டிக்கழிப்போடு தீர்வைத் தேடுகிறது.

இவ்விரு அரசுகளும் சேர்ந்து இனப்பிரச்சனையை வெறுமனே மொழிப்பிரச்சனையாக, பாதுகாப்பு பற்றிய பிரச்சனையாக, அதிகாரப் பகிர்வோடு தீர்த்து வைக்கக் கூடிய பிரச்சனையாக நினைத்து இணக்கம் காணும் காரியங்களில் இறங்கியுள்ளன. இந்த மேம்போக் கான செயற்பாடே இலங்கையில் நிலவிவந்த சிங்கள மேலாண்மை போக்கிற்கு, அதை மீளவும் காப்பாற்றிக் கொள்ள சந்தர்ப்பம் கொடுத்து விடப்போகிறது.

சோல்பரிக் கமிஷனை பிரித்தானியர் நியமித்திருந்த காலத்தில் தமிழ் பேசும் மக்கள் 50:50 கோரிக்கையை முன்வைத்தபோது, அதை நியாயமானது எனக் கூறிய பிரித்தானியர்; திருகோணமலைத் துறை முகத்தையும், கட்டுநாயக்கா விமானத் தளத்தையும், 20 வருட குத்தகைக்கு பிரதமர் சேனநாயக்கா கொடுக்க இணங்கிய போது,

அதிகார வரம்பொன்றும், இவையனைத்தையும் செயலுக்குக் கொண்டுவரத் தேவையான அரசியல் விஸ்தீரணமுமேயாகும்.

இதற்காகப் போராடவேண்டிய சூழ்நிலைக்கே தமிழ் பேசும் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். ஜெயவர்த்தனவின் கபட நாடகம் இனியும் தொடருமாயின் தமது கோரிக்கைகளை வெல்வதற்காக மீண்டும் ஆயுதம் தாங்கும் கட்டாயம் கூட ஏற்படலாம். இத்தகைய, தமிழ் பேசும் மக்களின் எண்ண அபிலாசைகளுக்கு ஈடு கொடுக்கக் கூடிய அரசியல் விஸ்தீரணத்தையும், அரசியல் அதிகாரத்தையும் ஈழப் புரட்சி அமைப்பானது பின்வருமாறு முன்மொழிகிறது.

## எமது முன்மொழிவுகள்

★ தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக்கொண்டிருக்கக் கூடியதாயும் நிலப்பரப்பால் தொடர்புடையதாயும் அமைந்த வடக்கு கிழக்கு, மலையகப் பகுதிகளில் புதிய மாவட்ட வரையறுப்புக்களைச் செய்தல். இம் மாவட்டங்களின் இணைப்பிலிருந்து புதிய மாகாண எல்லை நிர்ணயிப்பைச் செய்தல்.

★ புதிய மாகாண அமைப்பில் ஒரு அரசியல் அதிகாரசபை வடிவமைப்பைக் கொண்டு வருதல்.

★ மேற்படி அரசியல் அதிகார சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இப்பிரதேச இன விகிதாசார அடிப்படையில் அமைந்த புதிய படைப் பிரிவொன்றை அமைப்பதனூடாக தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

★ வடக்கு கிழக்கு மலையகப் பகுதிகளுக்கிடையிலான நேரடிப் பொருளாதார இணைப்பை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை அமுலாக்கல், சமதர்மப் பொருளாதாரத்தை நோக்கி இவற்றை நெறிப்படுத்துதல்.

★ தற்போது கடைப்பிடிக்கப்படும் நாடுதழுவிய இன விகிதாசார அடிப்படையில் அமைந்த குடியேற்ற முறையை நிராகரித்து, மாவட்ட இன விகிதாசாரத்தை அடியொற்றிய குடியேற்றங்களைச் செய்தல். இவ் விகிதாசாரமானது 1948ஆம் ஆண்டை நியமமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

★ கல்வி, கலை, கலாச்சாரம், தொழில் நுட்பம் முதலான அம்சங்களில் தமிழ் பேசும் மக்களின் தனித்துவம் சிதையா வகையில் சுயாதீனமான செயற்பாடுகளைச் செய்தல்.

★ சர்வதேசக் கோட்பாடுகளில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நிலைப்பாட்டைப் பின்பற்றுவதுடன் நட்பு நாடுகளிடமிருந்து நேரடி உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் அதிகாரத்தை உருவாக்குதல்.

இவ் அரசியல் உறுதிப் பாட்டை அடைவதற்கிடையில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மீறும் சக்திகளை இனம் காட்டவும், ஒப்பந்தத்தின் பலவீனங்களை வெளிக்காட்டவும் பின்வரும் கோரிக்கைகளை அரசியல் கோஷங்களாகக் கொண்டு ஜனநாயக வரம்புக்குட்பட்ட செயல்களில் ஈடுபட ஈழப் புரட்சி அமைப்பு தீர்மானித்திருக்கிறது.

★ ஒப்பந்தத்தின்படி அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படல் வேண்டும்.

www.padippakam.com



★ பொதுப் பிரகடனம் மூலம் குடியுரிமை இழந்த மலையகத் தொழிலாளர்களுக்கு குடியுரிமை வழங்கவேண்டும். காலாவதியான சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தைத் தழுவி மேற்கொள்ளப்படும் நாடு கடத்தல் தீர்மானத்தை ரத்து செய்தல் வேண்டும்.

★ திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களையும், ஊர்காவல் படையையும் கலைத்தல் வேண்டும்.

★ தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்ப்பதற்கு ஏதுவாக இலங்கை-இந்திய அரசுப் பிரதிநிதிகளையும் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய உயர் மட்டக்குழுவொன்றை நிறுவுதல் வேண்டும்.

★ தேடுதலற்ற யுத்த நிறுத்தம் ஒன்றின் மூலம் இந்திய அமைதி காப்புப் படை-புலிகள் மோதல் உடன் நிறுத்தப்படல் வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைகள் பேசித்தீர்க்கப்படல் வேண்டும்.

★ இந்திய அமைதி காப்புப் படை இந்தியாவின் பாதுகாப்பிற்குரிய கேந்திர நிலையங்களில் கண்காணிப்புச் செய்யும் "கேந்திர கண்காணிப்புப் படையாக" மட்டுமே செயற்பட வேண்டும்.

★ பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்படல் வேண்டும். தொழிற்சங்கங்களுக்கு எதிரான சட்டங்கள் நீக்கப்படல் வேண்டும்.

பொது ஆணைக்குழு
ஈழப் புரட்சி அமைப்பு
ஈழம், மார்ச் 1988

படிப்பகம்